بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

பதர்
வார இதழ் - காதியான்
Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4
வருடாந்திர சந்தா ரூபாய் 500/-
இதழ் 18
ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

26 ஷஃபான் 1440 ஹிஜ்ரி கமரி 02 ஹிஜ்ரத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
02 மே 2019


## அல்லாஹ்வின் கட்டளை

قُلْ اِنَّ الْفَضْلَ بِيَدِ اللّٰهِ ۚ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ؕ
وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ○
يَّخْتَصُّ بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ ؕ
وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ○

நீர் கூறுவீராக! நிச்சயமாக அருள் என்பது அல்லாஹ்வின் கையில் இருக்கின்றது. அவன் நாடுபவருக்கு அவ்வருளை வழங்குகின்றான். அல்லாஹ் மிகவும் தாராளமாக வழங்குபவனும் நன்கு அறிபவனுமாவான். அவன் விரும்புவோரைத் தன் அருளுக்குத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான். அல்லாஹ் பேரருள் செய்பவனாவான்.
(3:74,75)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

# 124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொல்லும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்தக் கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்போடு தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெற்றவர்களின் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

### இரண்டாவது நாளின் இரண்டாவது அமர்வு (சனிக்கிழமை)

இரண்டாம் நாளின் இரண்டாம் அமர்வு மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது சாஹிப் ஹாபிஸ் ஆபாதி (வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது காதியான்) அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவின் மாணவர் மதிப்பிற்குரிய ஹாபிஸ் முஸஃப்பர் ஆலிம் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய அதாவுல்லாஹ் நுஸ்ரத் சாஹிப் (நாயிப் நாஸிர் பைத்துல் மால் ஆமத் காதியான்) அவர்கள் எடுத்துக் கூறினார்கள். பிறகு இஸ்மத்துல்லாஹ் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரிகளை அழகிய குரலில் படித்துக் காட்டினார்கள்.

இதற்குப் பிறகு மதிப்பிற்குரிய தன்வீர் அஹ்மது சாஹிப் காதிம் (நாயிப் நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் வட இந்தியா) அவர்கள் 'எல்லோரிடத்தும் அன்பு எவர் மீதும் இல்லை வெறுப்பு' என்ற தலைப்பில் பஞ்சாபி மொழியில் சொற்பொழிவாற்றினார்கள்.

அன்னாரது சொற்பொழிவுக்குப் பிறகு சில அரசியல் மற்றும் மார்க்கத்தைச் சார்ந்த கண்ணியமிக்க பெருமக்கள் தமது நற்தாக்கங்களை எடுத்துக் கூறினார்கள். சுருக்கமாக வாசகர்கள் முன் எடுத்து வைக்கப்படுகின்றது.

**(1) மதிப்பிற்குரிய சன்த் பாபா சுக் தேவ் சிங் ஜி சாஹிப்:**

அன்னார் குரு பாபா நானக் ஜி அவர்களின் 16 வது வம்சாவழியைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் டேரா பாபா நானக்குடன் தொடர்பு கொண்டவர்கள். அன்னார் முதலில் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அன்னார் கூறினார்கள்: நான் இன்று இங்கு வந்ததில் மிக்க மகிழ்ச்சியை உணர்கின்றேன். மேலும் நான் இந்த மகத்துவமிக்க மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கு அனைத்து மார்க்கங்களையும் சார்ந்த கண்ணியமிக்க உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும் அமைதியை பரப்புவது தொடர்பான உங்களது முயற்சி போற்றத்தக்கதாகும். உங்களது இந்த மாநாட்டிற்கு வந்ததனால் உள்ளத்திற்கு அமைதி கிடைக்கிறது. உங்களது இந்த சகோதரத்துவத்தை அல்லாஹ் மேலும் முன்னேற்றமடையச் செய்வானாக. உலகம் இன்று மிக வேகமாக அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. எல்லா புறமும் மார்க்கத்தின் பெயரால் பகைமை பரப்பப்படுகிறது.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து அன்பின் இந்த தூதுச் செய்தியை மேலோங்கச் செய்ய வேண்டும். நான் உலகின் எந்த மூலைக்கு சென்றாலும் அங்குள்ள ஜமாஅத் உறுப்பினர்கள் அன்புடனும், கலப்பற்றத் தன்மையுடனும் சந்திக்கின்றனர். மேலும் மிகுந்த கண்ணியம் அளிக்கின்றனர். இறுதியாக மீண்டும் ஒரு முறை இந்த மகத்துவமிக்க மாநாட்டிற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(2) மதிப்பிற்குரிய ஃபதஸ் ஜனங் சிங் பாஜ்வா சாஹிப் (MLA காதியான்):**

அன்னார் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்தார்கள். மேலும் ஸலாத்திற்கான அன்பளிப்பை தெரிவித்தவாறு இந்த கவிதையை படித்தார்கள். அதாவது, இது அன்பின் நகரமாகும்; இது கொள்கைப் பிடிப்புள்ள நகரமாகும். இந்த நகரத்தின் மண்ணை கண்களில் தேய்த்துக் கெள்ள வேண்டும்.

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மறுமை நாளில் ஒரு சமுதாயம் கொண்டு வரப்படும். அவர்களிடம் நன்மைகள் திஹாமா மலையின் அளவுக்கு இருக்கும். ஆனால் எடுத்து வைக்கப்படும் போது இறைவன் அவர்களின் அனைத்து நற்செயல்களையும் வீணாக்கி விடுவான். அதனை நெருப்பில் இடுவான்.... அவர்கள் எத்தகைய மக்களாவார் எனில் அவர்கள் நோன்பு நோற்பார்கள். தொழுவார்கள். இரவில் சிறிது நேரமே உறங்குவர். நஃபில் தொழுவர். ஆனால் அவர்களிடம் அனுமதிக்கப்படாதவை வைக்கப்பட்டால் அதனைத் தீண்டுவர். உலகியல் பேராசையில் வீழ்ந்து விடுவர்**

**தம்மைச் சார்ந்தவர்களும் அநீதி செய்தனர் அல்லது தவறு செய்தனர் என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியது மட்டுமின்றி அதனைத் தடுத்து அதற்கு நஷ்ட ஈடும் வழங்கினார்கள். அநீதிக்குள்ளானவர்களுக்கு மன நிம்மதிக்காக எல்லா முயற்சிகளையும் செய்தார்கள்**

**இவ்விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். தூரம் அதிகமாக இருக்குமென்றால், வாகன வசதி இல்லை. மேலும் நேரம் இல்லை என்றால்.... அஹ்மதிகள் தமது வீடுகளில் தொழுகை சென்டர் அமைத்து அக்கம்பக்கத்தவரை ஒன்று கூட்டி ஜமாஅத்துடன் தொழ வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் இந்த கட்டளையின்படி செயல்படக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் துலைப் பின் உமைர் (ரலி), ஹஸ்ரத் சாலிம் மவ்லா அபீ ஹுதைஃபா (ரலி) மற்றும் ஹஸ்ரத் உத்பான் பின் மாலிக் (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**கண்ணியத்திற்குரிய குலாம் முஸ்தஃபா அஃவான் சாஹிப் மற்றும் கண்ணியத்திற்குரிய முஹம்மது நவாஸ் சாஹிப் காட்கடியின் மனைவியான மதிப்பிற்குரிய அமத்துல் ஹய் சாஹிபா ஆகிய இருவரது நற்குறிப்பை எடுத்தக் கூறியவாறு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 29 மார்ச் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **29 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் பத்ர் போரின் சஹாபாக்களைப் பற்றி கூறுவேன். அவர்களில் முதலாவது **துலைப் பின் உமைர்** பற்றி கூறுகிறேன். அவரது சுட்டுப்பெயர் அபூ அதி ஆகும். இவரது தாயார் பெயர் அர்வா. இவர் அப்துல் முத்தலிபின் மகள் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மாமி ஆவார்கள். அவரது சுட்டுப்பெயர் நான் கூறியது போன்று அபூ அதி ஆகும். இவர் ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுள் ஒருவர் ஆவார். அவர் இஸ்லாத்தை ஏற்கும் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாரே அர்கம் –இல் இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 93 துலைப் பின் உமைர் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூ சலமா பின் அப்துர் ரஹ்மான் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் துலைப் பின் உமைர் தாரே அர்கமில் ஈமான் கொண்டார்கள். அவர் அங்கிருந்து வெளியேறி தாயாரிடம் சென்று, நான் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுகிறேன். அல்லாஹ் ரப்புல் ஆலமீன் மீது ஈமான் கொள்கிறேன் என்றார். அவரது தாயார், உம்முடைய உதவி மற்றும் ஒத்துழைப்பிற்கு மிகவும் உரிமையுடையவர் உமது மாமாவின் மகனேயாவார். அதாவது முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்றார். அவர் மிகவும் ஆதரவு தெரிவித்தவாறு ஈமான் கொள்ளுமாறு கூறினார்.

மேலும், இறைவன் மீது ஆணையாக! பெண்களிடமும் ஆண்களைப் போன்ற சக்தி இருந்தால் நாங்களும் நிச்சயமாக அவரைப் பின்பற்றுவோம். அவருக்கு உதவியும் தற்காப்பும் வழங்குவோம் என்றார். உடனே துலைப் தமது தாயாரிடம், இவ்வளவு உணர்வு உங்களிடம் இருக்கும்போது நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏன் பின்பற்றுவதில்லை? உங்கள் சகோதரர் ஹம்சாவும் முஸ்லிமாகி விட்டார் என்று கூறினார். அவரது தாயார், நான் எனது சகோதரிகளின் உதாரணத்தைப் பார்க்கிறேன். பிறகு நானும் சேருவேன் என்றார்.

அதற்கு துலைப், நான் அல்லாஹ்வை நாடி உம்மிடம் கூறுகிறேன். நீங்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு சேவை செய்யுங்கள். அவர்களுக்கு ஸலாம் கூறுங்கள். அவரை உண்மைப்படுத்துங்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு வணங்கத் தகுதியானவர் இல்லை என்று சாட்சி கூறுங்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்று கூறியதும் அவரது தாயார், நானும் சாட்சி கூறுகிறேன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் ரஸூல் ஆவார்கள் என்று கூறினார்.

இதற்குப் பிறகு அவர் நாவினாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவியும் செய்து கட்டுப்படுமாறு கூறினார்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 266 கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா ஸிக்ர் மனாகிப் துலைப் பின் உமைர் (ரலி) ஹதீஸ் எண் 5047 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவாகப் பேசிய ஓர் இணை வைப்பவரை காயப்படுத்திய முதல் மனிதனாவார் என்று வரலாற்றில் வருகிறது. அதன் விபரம் இவ்வாறாகும்.

ஒருமுறை அவ்ஃப் பின் சப்ரா சஹ்மி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசினார். ஹஸ்ரத் துலைபு ஓர் ஒட்டகத்தின் கடைவாய்ப்பல்லை எடுத்து அடித்து அவரை காயப்படுத்தினார். ஒருவர், அவரது தாயாரிடம் புகார் கூறிய போது, உங்கள் மகன் என்ன செய்தான் என்று உமக்கு தெரியுமா? என்றதும் அவர் பதில் கூறினார்.

اِنَّ طُلَيْبًا نَصَرَ ابْنَ خَالِهٖ     وَاسَاهُ فِيْ ذِيْ دَمِهٖ وَمَالِهٖ

துலைப் தமது மாமாவின் மகனுக்கு உதவி செய்துள்ளார். அவர் தமது இரத்தம் மற்றும் பொருள் மூலம் துயர் துடைத்துள்ளார்.

சிலரது கருத்தின்படி அவர் யாரை அடித்தாரோ அவரது பெயர் அபூ இஹாப் பின் அஸீர் தாரிமி ஆகும். சிலரது கருத்தின்படி துலைப் காயப்படுத்திய மனிதர் அபூலஹப் அல்லது அபூஜஹில் ஆவர். ஓர் அறிவிப்பின்படி அவர் தாக்குதல் தொடுத்தது பற்றி தாயாரிடம் முறையீடு செய்யப்பட்டபோது அவர், துலைப் உடைய வாழ்நாளில் மிகச் சிறந்த நாள் தமது மாமாவின் மகன் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்குத் தற்காப்பு செய்த நாள்தான். ஏனெனில், அவர் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உண்மையுடன் வந்துள்ளார் என்று கூறினார்.

(அல் அஸாபா தொகுதி 3 பக்கம் 439 துலைப் பின் உமைர் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் லில் ஹாகிம் தொகுதி 4 பக்கம் 57 கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா ஸிக்ர் அர்வா பின்த் அப்துல் முத்தலிப், ஹதீஸ் எண் 6868 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் துலைப் அபிஸீனியா நோக்கி இடம் பெயர்ந்தவர்களுள் ஒருவராக இருந்தார். அபிஸீனியாவில் குறைஷிகளின் வதந்தி வந்து சேர்ந்தபோது சில முஸ்லிம்கள் அபஸீனியாவிலிருந்து மக்காவுக்கு திரும்பி வந்தனர். துலைப் அவர்களும் அதில் ஒருவராக இருந்தார்.

ஏற்கெனவே கூறியதுபோன்று மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிபின் கருத்தின்படி சில வரலாற்று ஆசிரியர்கள் கருத்து இதுவாகும். அதாவது இடம்பெயர்ந்தவர் அபிஸீனியா சென்று நீண்ட காலம் ஆகியிருக்கவும் இல்லை. அதற்குள் எல்லா குறைஷிகளும் முஸ்லிமாகி விட்டனர் என்ற வதந்தி வந்தது. மக்கா முழுமையாக பாதுகாப்பில் வந்து விட்டது என்றதும் சிலர் சிறிதும் யோசிக்காமல் திரும்பி வந்து விட்டனர். பிறகு தான் செய்தி பொய் என்று தெரிந்தது.

இது பற்றி சில வாரங்களுக்கு முந்தைய குத்பாவில் கூறியுள்ளேன். எவ்வாறிருப்பினும் திரும்பி வந்த போது, மக்காவின் தலைவர்களின் அடைக்கலம் பெற்று வந்தபோது உண்மை தெரிய வந்தது. செய்தி பொய்யாகும் என்று தெரிய வந்தது. இவ்வாறு வதந்தி பரப்பப்பட்டதைப் பற்றி நான் கூறி விட்டேன். இப்போதும் கூற வேண்டிய தேவை இல்லை. எவ்வாறிருப்பினும், சஹாபா திரும்ப மக்காவுக்கு வந்தனர். அங்கு குறைஷிகளின் அடக்குமுறைகள் நாளுக்கு நாள் அதிகமானது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்பவே சிறிது சிறிதாக சஹாபா மறைமுகமாக இடம்பெயர்ந்தனர். அங்கு அபிஸீனியாவில் சஹாபாக்களின் எண்ணிக்கை 101 வரை ஆகி விட்டது. அதில் 18 பெண்களும் இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நிறைய முஸ்லிம்கள் இருந்தனர். திரும்பி வந்த பிறகு மீண்டும் இடம் பெயர்ந்தார்கள். பிறகும் செல்லும்போது நிறைய பேர் இடம்பெயர்ந்ததால் இந்த ஹிஜ்ரத்தை வரலாற்று ஆசிரியர்கள் இரண்டாவது அபிஸீனியா இடம்பெயரல் என்று கூறுகின்றனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 147,149)

ஹஸ்ரத் துலைப் மக்காவிலிருந்து இடம்பெயர்ந்து மதீனாவுக்கு வந்தார். அவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சலமா அஜிலானியிடம் தங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் துலைப் அவர்களுக்கும் முன்ஸிர் பின் அம்ர் இருவருக்கும் சகோதரத்துவத்தை ஏற்படுத்தி தந்தார்கள். ஹஸ்ரத் துலைப் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். இவர் பெரிய சஹாபாக்களில் அடங்கியிருந்தார். இவர் அஜ்னாதைன் போரிலும் கலந்து கொண்டார். இது ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு ஜமாத்தில் அவ்வல் மாதம் நடந்தது. அதே போரில் தமது 35 வது வயதில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். அஜ்னாதைன் என்பது சிரியாவில் உள்ள ஓரிடத்தின் பெயர் ஆகும். இங்கு முஸ்லிம்களுக்கும் ரோமானியர்களுக்கும் இடையில் ஹிஜ்ரி 13 –ல் யுத்தம் நடந்தது. சிலரது கருத்தின்படி இவர் யர்முக் போரில் பங்கு பெற்றார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 91 துலைப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 94 துலைப் பின் உமைர் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 129 அஜ்னாதீன் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி **சாலிம் மவ்லா இப்னி அபீ ஸைஃபா**. இவரது சுட்டுப்பெயர் அபூ அப்துல்லாஹ் ஆகும். இவரது தந்தை மஅக்கில் சாலிம் உடைய தந்தையார் பெயர் நான் கூறியது போன்று ஈரானின் ஒரு பகுதியாகிய இஸ்தகிரில் தங்கியிருந்தார். இவர் பெரிய சஹாபாக்களில் ஒருவராக இருந்தார். இவர் இடம்பெயர்ந்தவர்களைச் சார்ந்தவராகவும் இருந்தார். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து விட்டார். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சாலிம் மற்றும் முஆஸ் பின் மாஇஸ் இருவருக்கும் இடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 282,283 சாலிம் மவ்லா அபீ ஹுஸைஃபா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சாலிம் சுபைதா பின்த் யார் உடைய அடிமையாக இருந்தார். இவர் அபூ ஹுஸைஃபாவின் மனைவி ஆவார். ஹஸ்ரத் சுபைதா ஹஸ்ரத் சாலிமை விடுதலை செய்து விட்டார். அக்காலத்தில் அடிமைகள் சம்பந்தமாக ஒரு பொதுச் சட்டம் இருந்தது. ஒருவரை விடுதலை செய்து விட்டால் விடுதலை விடப்பட்ட அடிமை மரணித்தால் அவரது பொருள்களின் வாரிசாக அவரை விடுதலை விட்டவரே இருப்பார்.

ஸாயிபா என்பவர் எத்தகைய அடிமை என்றால் அவரது எஜமானர் அவரை விடுதலை செய்து விட்டு அல்லாஹ்வின் வழியில் அவரை விட்டு விடுவார். அவர் மரணித்தால் கூட அவரது பொருள் மீது விடுதலை செய்தவருக்கு உரிமை இல்லை.

ஹஸ்ரத் ஸாலிம் அவர்களை ஹஸ்ரத் அபூ ஹுதைபா தமது வளர்ப்பு மகன் ஆக்கி இருந்தார். பிறகு ஸாலிம் பின் அபூ ஹுதைபா என்று அழைக்கப்பட்டார். அபூ ஹுதைபா தமது சகோதரர் மகளாகிய பாத்திமா பின்த் வலீதை திருமணமும் செய்து வைத்தார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 63 சாலிம் மவ்லா அபீ ஹுஸைஃபா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்முஸ்தத்ரிக் அலஸ் சஹ்யைன் (மொழிபெயர்ப்பு) தொகுதி 4 பக்கம் 434 (அடிக்குறிப்பு) – 2012 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு அல்லாஹ் இவ்வாறு வசனத்தை இறக்கியதும் அதாவது,

اُدْعُوْهُمْ لِاٰبَآئِهِمْ هُوَ اَقْسَطُ عِنْدَ اللّٰهِ ۚ فَاِنْ لَّمْ تَعْلَمُوْۤا اٰبَآءَهُمْ فَاِخْوَانُكُمْ فِی الدِّیْنِ وَمَوَالِیْكُمْ ؕ وَلَیْسَ عَلَیْكُمْ جُنَاحٌ فِیْمَاۤ اَخْطَاْتُمْ بِهٖ وَلٰكِنْ مَّا تَعَمَّدَتْ قُلُوْبُكُمْ ؕ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِیْمًا

நீங்கள் அவர்களை (வளர்ப்புப் பிள்ளைகளை) அவர்களின் தந்தைகளின் பெயர்களை (இணைத்துக்)கூறி அழையுங்கள். இதுவே அல்லாஹ்விடத்தில் மிகவும் நேர்மையானது. ஆனால் நீங்கள் அவர்களின் தந்தைகளை அறியவில்லையாயின், அவர்கள் உங்கள் மார்க்க சகோதரர்களும் உங்கள் நண்பர்களுமாவர். (ஏற்கெனவே) நீங்கள் இழைத்த தவறுகளுக்கு உங்கள் பேரில் குற்றமில்லை. ஆனால் உங்கள் உள்ளங்கள் (உறுதியாக) நாடியதற்கு (தண்டனை உண்டு). அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (33:6) ஹஸ்ரத் ஸாலிம் மவ்லா அபூஹுதைபா என்று கூற ஆரம்பித்தார். முதலில் அபூஹுதைபாவின் மகன் என்று கூறி வந்தார். தெளிவுபடுத்தப்பட்ட பிறகு விடுதலை விடப்பட்ட அடிமையான இவர் சகோதரர் அல்லது நண்பர் ஆகி விட்டார்.

முஹம்மது பின் ஜாபிர் அறிவிக்கிறார். ஹஸ்ரத் அபூ உஸைபா மற்றும் ஹஸ்ரத் சாலிம் பின் மவ்லா. ஹுதைபா மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தபோது அவர்கள் அப்பாது பின் பஷர் வீட்டில் தங்கியிருந்தார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 62 அபூ ஹுஸைஃபா பின் உத்பா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. தொடக்க கால இடம் பெயர்ந்தவர்கள் மக்காவிலிருந்து மதீனா வந்ததும் கபாவுக்கு அருகில் உஸ்பா என்ற இடத்தில் தங்கினர். ஹஸ்ரத் ஸாலிம் அம்மக்களுக்கு இமாமத் செய்தார். ஏனெனில் எல்லாரையும் விட அவர் திருக்குர்ஆனை நன்கு அறிந்திருந்தார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 64 சாலிம்ம மவ்லா அபூ ஹுஸைஃபா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மஸ்வூது பின் ஹுனைதா அறிவிக்கிறார். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சென்றபோது நாங்கள் ஒரு பள்ளியைப் பார்த்தோம். அங்கு சஹாபா மஸ்ஜிது அக்ஸாவை நோக்கி தொழுது கொண்டிருந்தனர். ஹஸ்ரத் ஸாலிம் பின் அபூ ஹுதைபா அம்மக்களுக்கு இமாமத் செய்து வந்தார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 4 பக்கம் 233 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஸாலிம் திருக்குர்ஆன் காரியாக இருந்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுமாறு கூறியிருந்த நான்கு சஹாபாக்களில் சாலிம் அவர்களும் ஒருவர்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 382 சாலிம் மவ்லா அபீ ஹுஸைஃபா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்: விடுதலை செய்யப்பட்ட சில அடிமைகள் அறிவு ஞானத்தில் பெரும் உயர்வு பெற்றிருந்தார்கள். ஸாலிம் பின் மவ்லா அபூ ஹுதைபா அதில் முக்கிய சிறப்பான அறிஞர்களாக விளங்கிய சஹாபிகளுள் ஒருவராக கருதப்பட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனைக் கற்பிப்பதற்காக நான்கு சஹாபிகளை நியமித்திருந்தார்கள். அவர்களில் சாலிம் (ரலி) அவர்களும் அடங்குவார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 399)

பிறகு இது தொடர்பாக வரலாற்றில் மேலும் எழுதப்பட்டுள்ளது. சாலிம் பின் மஃக்கில் அவர்கள் அபூ ஹுதைபாவால் விடுதலை செய்யப்பட்ட அடிமை ஆவார்கள். ஆனால் அவர் தமது அறிவு ஞானத்தில் எவ்வளவு முன்னேறினார்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்கு சஹாபிகளை திருக்குர்ஆன் கற்பிக்க முஸ்லிம்களுக்கு நியமித்திருந்தார்கள். அவர்களை அன்னார் தமது உதவியாளர்களாக கருதியிருந்தார்கள். அவர்களுள் ஒருவர் ஸாலிம் ஆவார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 403)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அந்த நான்கு சஹாபிகளிடம் திருக்குர்ஆனை கற்றுக் கொள்ளுங்கள். (1) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) (2) சாலிம் மவ்லா அபூஹுதைஃபா (ரலி) (3) ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) (4) மஅஸ் பின் ஜபல் (ரலி) ஆகியோர் ஆவர்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்காபுன் நபி, பாப் மனாகிப் சாலிம் மவ்லா அபீ ஹுதைஃபா ஹதீஸ் எண் 3758)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வர சற்று நேரம் ஆகி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நேரம் கழித்து வந்ததற்கு காரணம் கேட்ட போது, அன்னார், ஒரு காரி மிகவும் அழகிய குரலில் திருக்குர்ஆன் ஓதுகிறார். அதனைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அதனால் நேரமாகி விட்டது என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரையை அகற்றி வெளியில் பார்த்தார்கள். ஸாலிம் ஓதிக் கொண்டு இருந்தார். பிறகு அன்னார் கூறினார்கள்: இறைவனுக்கு நன்றி. இத்தகைய காரியை எனது உம்மத்தில் உருவாக்கியுள்ளான் என்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 383 சாலிம் மவ்லா அபீ ஹுஸைஃபா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமடைந்தபோது அன்னாரின் காயத்தை துடைக்கும் ஹஸ்ரத் ஸாலிமுக்கு வாய்ப்பு கிடைத்தது. கதாதாவிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நெற்றி மற்றும் பல்லுக்கிடையில் காயம் ஏற்பட்டது.

ஸாலிம் மவ்லா பின்த் அபூ ஹுதைபா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காயத்தை துடைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். தமது நபியிடம் இவ்வாறு நடந்து கொள்ளும் சமுதாயம் எவ்வாறு வெற்றி பெறும் என்று கூறினார்கள். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

لَيْسَ لَكَ مِنَ الْاَمْرِ شَيْءٌ اَوْ يَتُوْبَ عَلَيْهِمْ اَوْ يُعَذِّبَهُمْ فَاِنَّهُمْ ظٰلِمُوْنَ ﴿١٢٩﴾

உம்மிடம் எந்த அதிகாரமும் இல்லை. அவன் அவர்களின் தவ்பாவை ஏற்றுக் கொண்டவாறு குனியலாம். அல்லது தண்டனை தரலாம். இவர்கள் அநீதியிழைப்பவர்களாவர். (3:129)

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 35 மன் கதல மினல் முஸ்லிமீன யவ்மே அஹது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸாலிம் கூறுகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளில் ஒரு சமுதாயம் கொண்டு வரப்படும். இது மிகவும் கவனித்து கேட்க வேண்டிய விஷயமாகும்.

மறுமை நாளில் ஒரு சமுதாயம் கொண்டு வரப்படும். அவர்களிடம் நன்மைகள் திஹாமா மலையின் அளவுக்கு இருக்கும். திஹாமா என்பது அரபின் கடற்கரை ஓரப்பகுதியில் செல்லும் மேடு பள்ளமான மலைத்தொடர். அது சீனாவில் ஆரம்பித்து அரபு நாட்டின் மேற்கு மற்றும் தெற்கு வரை தொடர்கிறது. திஹாமா மலைத்தொடர் கலிஜ் குல்ஸமிலிருந்து தொடங்குகிறது. அவர்களின் நற்செயல்கள் திஹாமா மலை அளவுக்கு இருக்கும்.

ஆனால் எடுத்து வைக்கப்படும் போது இறைவன் அவற்றை மறுத்து விடுவான். அவர்களை நெருப்பில் இடுவான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதும் ஸாலிம் கேட்டார். யாரஸூலல்லாஹ்! எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணம்! நீங்கள் அத்தகைய மக்களை சுட்டிக் காட்டினால் அறிந்து கொள்வோம் என்றார். உங்களை உண்மையுடன் அனுப்பிய இறைவன் மீது ஆணையாக! நான் என்னைப் பற்றி நானும் அதில் ஒருவனாக இருந்து விடக் கூடாதே என்று அஞ்சுகிறேன்.

உடனே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இது மிகவும் கேட்க வேண்டிய விஷயமாகும். எத்தகைய மக்களாவார் எனில் அவர்கள் நோன்பு நோற்பார்கள். தொழுவார்கள். இரவில் சிறிது நேரமே உறங்குவர். நஃபில் தொழுவர். ஆனால் அவர்களிடம் அனுமதிக்கப்படாததவை வைக்கப்பட்டால் அதனைத் தீண்டுவர். உலகியல் பேராசையில் வீழ்ந்து விடுவர். அனுமதிக்கப்பட்டது எது? அனுமதிக்கப்படாதது என்று பார்க்க மாட்டார்கள். இதனால் இறைவன் அவர்களின் செயல்களை வீணாக்கி விடுவான்.

(மஃரூஃபத்துஸ் சஹாபா லா பீ நயீம் தொகுதி 2 பக்கம் 483 சாலிம் மவ்லா அபீ ஹுஸைஃபா, ஹதீஸ் எண் 3456 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸுஹ்பான் (ரலி) இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் எனது உம்மத்தில் ஒரு சிலரைப் பற்றி அறிவேன். அவர் கியாமத் நாளில் திஹாமாவின் மலை அளவு மினுமினுப்பான நற்செயல்களுடன் வருவர். ஆனால் அல்லாஹ் அவர்களின் செயல்களை ஒன்றுமற்றவையாகக் கருதி காற்றில் கலக்கச் செய்து விடுவான். பிறகு ஓர் அறிவிப்பாளரின் அறிவிப்பின்படி வருகிறது. சுபுஹான் கேட்டார்.

அல்லாஹ்வின் தூதரே! எங்களுக்கு ஓர் அடையாளம் கூறுங்கள். எங்களுக்கு அத்தகையவர் பற்றி தெளிவாக கூறுங்கள். நாங்கள் அவர்களில் உள்ளவராக ஆகாமல் இருக்க அவ்வாறு செய்யுங்கள். எங்களுக்கு தெரியாமல்போய் விடக்கூடாது என்றார்.

அன்னார் கூறினார்கள்: அவர்களும் உங்கள் சகோதரர்தான். உங்களது பகுதிகளேயாவர். அதாவது உங்கள் இனத்தைச் சார்ந்தவர்களே. உங்களைப் போன்றே இரவில் தொழுவதற்காக எழுகின்றனர். ஆனால் அல்லாஹ்வின் விலக்கல் கட்டளைகள் வரும்போது அதனை அவமரியாதை செய்து விடுகின்றனர்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் ஸஹர், பாப் ஸிக்ருஸ் ஸனூப் ஹதீஸ் எண் 4245)

அல்லாஹ் தடுத்ததை ஹராம் ஆக்கியதைக் குறித்து உணர்வே இல்லாமல் ஹராம் எது? ஹலால் எது? என்று பார்க்காமல் போகுமாறு உலகம் அவர்களை மிகைத்து விடுகிறது. எனவே நிரந்தர சிந்தனை உள்ளவர் மற்றும் பயம் உள்ளவர் உடைய தகுதியாவது அல்லாஹ் அவருக்கு ஒவ்வொரு விஷயத்தையும் ஆய்வு செய்யும் வாய்ப்பை நிரந்தரமாக வழங்குகிறான். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் உடைய மகன்களின் பெயர் ஸாலிம், வாசித் மற்றும் அப்துல்லாஹ் ஆகும். பெரிய சில சஹாபாக்களின் பெயரை அவர் மகன்களுக்கு வைத்தார். அவற்றில் ஒரு பெயர் ஸாலிம் ஆகும். அதாவது ஸாலிம் மவ்லா அபூ ஹுதைபாவின் பெயரை வைத்தார்.

ஸஹீது பின் அல் முஃைப் அறிவிக்கிறார். என்னிடம் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் கூறினார். நீங்கள் அறிவீர்களா? நான் எனது மகனுக்கு ஸாலிம் என்று ஏன் வைத்தேன் தெரியுமா? அவர் கூறுகிறார்: நான் எனக்கு தெரியாது என்று கூறினேன். அதற்கு அவர் எனது மகனுக்கு ஸாலிம் மவ்லா அபூ ஹுஸைவின் பெயரால் ஸாலிம் என்று வைத்தேன். நான் எனது மகனுக்கு வாகித் என்று ஏன் வைத்தேன் தெரியுமா? என்றதும் நான் தெரியாது என்றேன்.

அவர், ஹஸ்ரத் வாகித் பின் அப்துல்லாஹ் யர்பூஇ –யின் பெயரை வைத்தேன் என்றார். பிறகு நான் எனது மகனுக்கு அப்துல்லாய் என்று ஏன் வைத்தேன் தெரியுமா? என்றதும் நான் தெரியாது என்று கூற அவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவின் பெயரை வைத்தேன். அப்துல்லாஹ் என்று வைத்தேன் என்றார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 4 பக்கம் 119 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பெரிய சஹாபாக்களுக்கு பெரும் கண்ணியம் வழங்கினார்கள். தமது பிள்ளைகளுக்கு குறிப்பிட்ட நோக்கத்தில் அவர்களின் பெயரை சூட்டினார்கள். அப்பெரியவர்களின் பெயரை சூட்டினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அறிவிக்கிறார்கள். ஒரு போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தோம். சிலர் பயந்து போய் இருந்தனர். நான் எனது ஆயுதத்தை (யுத்தம் கடுமையாக இருந்ததால் சிலர் பதற்றமாக இருந்தனர்.) அதை வெளியில் எடுத்த போது ஸாலிம் மவ்லா அபீ ஹுதைபா மீது பட்டு விட்டது. அவர்களிடமும் ஆயுதம் இருந்தது. முகத்தில் கண்ணியமும் அமைதியும் இருந்தது. எந்த பதற்றமும் அவரிடம் இல்லை. முன்னே சென்று கொண்டிருநத்தார்.

நான், அந்த நல்ல மனிதர் பின்னால் செல்வேன் என்றேன். எந்த அளவுக்கு என்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சமூகம் வரை சென்று விட்டார். அவர்களுடன் அவர் அமர்ந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோபத்தின் நிலையில் வெளியே வந்து கூறினார்கள். என்ன பதற்றம்? என்ன பயம்? நீங்கள் இயலாதவராகி விட்டீர்களா? இந்த நம்பிக்கையாளர்கள் இருவரும் துணிவுடன் நடந்துள்ளனர். நீங்களும் அவ்வாறு செய்யுங்கள்.

(அத்தாரீஹுல் கபீர் தொகுதி 6 பக்கம் 127 பாபுல் அய்ன், ஹதீஸ் எண் 8538 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எந்த பதற்றமும் கூடாது. ஸாலிம் மற்றும் அவர்களுடன் இருந்தவர்கள் எந்த பதற்றமும் இன்றி இருப்பதாக உறுதி எடுத்து இருந்தார்களோ அதே போன்று இருங்கள்.

இப்னு இஸ்ஹாக் அறிவிக்கிறார்கள். மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவைச் சுற்றியுள்ள இடங்களுக்கு சிறு சிறு படைகளை அந்த கோத்திரத்தை இஸ்லாத்திற்கு அழைப்பதற்காக அனுப்பினார்கள். ஆனால் அந்த படைகளுக்கு யுத்தம் செய்ய கட்டளையிடப்படவில்லை. தப்லீக் செய்வதற்காக அனுப்பி இருந்தார்கள். யுத்தம் செய்யக் கூடாது என்று கூறி அனுப்பி இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலித் பின் வலீதை பனூ ஜஸைமா கோத்திரத்தை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதற்காக அனுப்பினார்கள். அவர்கள் ஹஸ்ரத் காலிதை பார்த்ததும்

அயூதத்தை எடுத்தனர். ஹஸ்ரத் காலித், மக்களே! மக்கள் முஸ்லிம் ஆகி விட்டனர். ஆயுதம் எடுக்க தேவை இல்லை என்றதும் அதில் ஜஹ்தம் என்ற ஒருவர் கூறினார். காலிதே! ஒருபோதும் ஆயுதத்தை கீழே போடவே மாட்டேன். எனக்கு நம்பிக்கையில்லை. அல்லாஹ்வின் மீது ஆணை! ஆயுதத்தை போட்டதும் கைது செய்து எங்கள் கழுத்தை வெட்டவா? என்றார்.

அவரது சமுதாயத்தை சார்ந்தவர்கள் அவரைப் பிடித்து, ஜஹ்தமே! நீ எங்கள் இரத்தத்தை சிந்தவா விரும்புகிறாய். நிச்சயமாக மக்கள் ஆயுதத்தை போட்டு விட்டனர். சண்டை முடிந்து விட்டது என்றார். பிறகு அவர்கள் அவரிடமிருந்து ஆயுதத்தைப் பிடுங்கினர். தாங்களும் ஆயுதத்தை போட்டு விட்டனர். அவர்கள் ஆயுதத்தை வைத்த பிறகும் ஹஸ்ரத் காலித், அவர்களுள் சிலரை வெட்டி விட்டார். சிலரை கைது செய்தார். நம்மில் ஒவ்வொருவரிடமும் ஒரு கைதியை ஒப்படைத்தார். மறுநாள் ஒவ்வொருவரும் தம்மிடம் உள்ள கைதியை கொலை செய்யுமாறு கட்டளையிட்டார்.

ஹஸ்ரத் ஸாலிம் மவ்லா அபூ ஹுதைபா அறிவிக்கிறார்: இறைவன் மீது ஆணை! நான் எனது கைதிகளை கொலை செய்யமாட்டேன். என்னுடன் இருப்பவர்களும் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்று கூறினேன்.

இப்னு ஹிஷாம் அறிவிக்கிறார்: அவர்களுள் ஒருவர் வெளியேறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து எல்லா சம்பவங்களையும் கூறினார். அன்னார், எவரும் காலிதின் இந்த செயலுக்கு தமது விருப்பமின்மையை தெரிவிக்கவில்லையா? என்று கேட்டார்கள். அவர் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அது பிடிக்கவில்லை. என்ன நடந்தது என்றால், அன்னார் எவருக்குமே அது பிடிக்காமல் போகவில்லையா? என்று கேட்டார்கள்.

அவர் கூறுகிறார்: ஆம். வெள்ளி நிறத்திலிருந்த ஒரு நடுத்தர உயரம் கொண்ட மனிதர் தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தினார். காலித் அவரை கண்டித்தார். அவர் அமைதியாகி விட்டார். இன்னொருவர் அவர் சற்று நெடிய உருவம் கொண்டவர். அவரும் தமது விருப்பமின்மையை வெளிப்படுத்தினார். காலித் அவருடனும் விவாதம் செய்தார். கசப்பான வார்த்தை வெளி வந்தன என்றார். உடனே ஹஸ்ரத் உமர் பின் கத்தாப், அல்லாஹ்வின் தூதரே! இருவரையும் நான் அறிவேன். ஒருவர் எனது மகன் அப்துல்லாஹ். இன்னொருவர் ஸாலிம் மவ்லா அபூ ஹுதைபா என்றார்கள்.

இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள்: அதற்குப் பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலியை அழைத்து அவர்களிடம் சென்று விவரத்தைக் கேட்டு வருமாறு கூறினார்கள். ஏன் அவ்வாறு நடந்தது? அறியாமைக் காலத்து நடைமுறையைக் காலடியில் இட்டு நசுக்கி விடு. முற்றிலும் அறிவீனமான செயல் நடந்துள்ளது. அதனை முற்றிலும் முடிவுக்கு கொண்டு வா என்று கூறினார்கள்.

இந்த வகையில் ஹஸ்ரத் அலியிடம் பொருளை எடுத்துக் கொண்டு செல்லுமாறு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். வெறுமனே அலியை அனுப்பவில்லை. நிறைய பொருட்களைக் கொடுத்து அனுப்பினார்கள். எவர்களுக்கு உயிர் மற்றும் பொருள் நஷ்டம் ஏற்பட்டதோ அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கினார்கள். பொருள் கொடுக்கக் காரணம் தவறுதலாக உயிர் பொருள் சேதம் ஏற்பட்டு விட்டது. அதற்காக நஷ்டஈடு வழங்கினார்கள்.

பிறகும் அலியிடம் சிறிது பொருள்கள் இருந்தன. அன்னார் அம்மக்களிடம் எவருக்காவது நஷ்டஈடு வராமல் உள்ளதா? என்று கேட்டார்கள். அவர்கள் இல்லை என்றனர். பெரும் நீதியுடன் எல்லாம் நடந்தது. எதுவும் மிச்சமில்லை. உடனே ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கவனிப்பின் கீழ் இப்பொருள்களை நான் உங்களுக்கு வழங்குகிறேன். ஏனெனில் அவர்கள் அறிந்ததை நீங்கள் அறியமாட்டீர்கள் என்றார்கள். இந்த வகையில் அன்னார் இந்தப் பொருள்களை வழங்கி விட்டு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்தார். நான் வருகிறேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சொல்லி அனுப்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் நன்றாக உமது பணியைச் செய்தீர்கள் என்றார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிப்லாவின் பக்கம் இரு கைகளையும் உயர்த்தி மூன்று முறை துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ اِنِّیْ اَبْرَأُ اِلَیْكَ مِمَّا صَنَعَ خَالِدُ ابْنُ الْوَلِیْد

அதாவது, அல்லாஹ்வே! நான் காலித் பின் வலீதின் செயலுக்கு உன்னிடம் பாவநிவர்த்தியை வேண்டுகிறேன்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் **557,558 – 2009** ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹஸமில் அச்சிடப்பட்டது & சஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் பஅஸுன் நபி (ஸல்), ஹதீஸ் எண் **4339**)

பெரிய தவறான வேலை நடந்து விட்டது. ஆகவே தம்மைச் சார்ந்தவர்களும் அநீதி செய்தனர். அல்லது தவறு செய்தனர் என்றால் அன்னார் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியது மட்டுமின்றி அதனை தடுத்து அதற்கு நஷ்டஈடும் வழங்கினார்கள். அநீதிக்குள்ளானவர்களுக்கு மன நிம்மதிக்காக எல்லா முயற்சிகளையும் செய்தார்கள். அவர்கள் எதிரியாக இருந்தும், அவர்களுள் சிலர் ஆயுதம் எடுத்தும் கூட அதனை செய்தார்கள். ஆனால் இருந்தும் தம்மக்கள் இவ்வாறு செய்வதை அன்னார் விரும்பவில்லை. இதுவே அன்னாரின் நீதியின் தரம் ஆகும்.

இப்ராஹீம் பின் ஹன்தலஹா தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். யமாமா போரின்போது ஹஸ்ரத் ஸாலிம் மவ்லா அபூஹுதைபாவிடம் கொடியைப் பாதுகாக்குமாறு கூறப்பட்டது. அவரது உயிர் குறித்து பயம் இருப்பதாகவும் அதனால் வேறு ஒருவரிடம் அப்பணியை வழங்குமாறும் சிலர் கூறியும் கூட ஹஸ்ரத் ஸாலிம், இருந்தும் நான் குர்ஆனை மனனம் செய்தவன் என்று கூறினார். என்னிடம் திருக்குர்ஆனின் அறிவு உள்ளது.

அந்த அறிவை வைத்துக் கொண்டு நான் அமல் செய்யவில்லை என்றால் அது மிகவும் தீயது அல்லது உயிர் பயம் ஆகும். திருக்குர்ஆனின் ஒரு கட்டளையை – கடமையை செய்வதிலிருந்து தப்பினால் பிறகு திருக்குர்ஆனின் அறிவு இருந்து என்ன பயன்? என்றார். எவ்வாறிருப்பினும் போரில் அவரது வலது கை வெட்டப்பட்டது. இடது கையால் கொடியைப் பற்றினார். இடது கையும் வெட்டப்பட்டது. தமது கழுத்தால் பிடித்துக் கொண்டார். மேலும் இவ்வாறு பாடினார்.

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ (3:145)

وَكَاَيِّنْ مِّنْ نَّبِيٍّ قٰتَلَ ۙ مَعَهٗ رِبِّيُّوْنَ كَثِيْرٌ ۚ (3:147)

முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் ஒரு தூதராவார். எத்தனையோ நபிமார்களுடன் சேர்ந்து நிறைய இறை மக்கள் வெட்டுண்டுள்ளனர்.

ஹஸ்ரத் ஸாலிம் விழுந்ததும், உடன் இருந்தவர்களிடம் அபூஹுதைபா உடைய நிலை என்ன? என்று கேட்டபோது மக்கள் அவர் ஷஹீதாகி விட்டதாகக் கூறினர். பிறகு ஒருவரின் பெயரைக் கூறி அவர் என்ன செய்தார் என்று கேட்டபோது அவரும் ஷஹீதாகி விட்டார் என்று கூறப்பட்டதும் ஹஸ்ரத் ஸாலிம், என்னை அவ்விருவருக்கும் நடுவில் இடுங்கள் என்றார். அவர் ஷஹீதானதும்

பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வாரிசுப் பொருட்களை ஸபீதத் பின் இயார் இடம் அனுப்பினார்கள். அவர் ஹஸ்ரத் ஸாலிமை விடுதலை செய்திருந்தார். எனவே அவற்றை ஏற்கவில்லை. நான் அவரை ஸாயிபாவாக்கி இறைவனுக்காக இறை வழியில் அவரை விடுதலை செய்து விட்டேன் என்றார். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரது வாரிசுப் பொருட்களை பைத்துல் மாலில் சேர்க்கச் செய்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 384 சாலிம் மவ்லா அபீ ஹுஸைஃபா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஹம்மது பின் சாபித் அறிவிக்கிறார்: யமாமா போரில் முஸ்லிம்கள் சிதறியபோது ஹஸ்ரத் ஸாலிம் கூறினார். நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருக்கும்போது இவ்வாறு செய்ததில்லை. ஓடியதில்லை என்றவாறு அவர் தனக்காக ஒரு பள்ளம் தோண்டி அதில் நின்று கொண்டார். அன்று அவரிடம் இடம்பெயர்ந்தவர்களின் கொடி இருந்தது. அதற்குப் பிறகு அவர் வீரத்துடன் போரிட்டு ஷஹீதானார். 12 ஹிஜ்ரியில் யமாமா போர் நடந்தது. அதில் ஷஹீதானார்கள். இந்த சம்பவம் அபூபக்கர் உடைய கிலாஃபத் காலத்தில் நடந்தது. தீப்காத்துல் குப்ராவில் இதற்கு ஆதாரம் உள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 64,65 சாலிம் மவ்லா அபீ ஹுஸைஃபா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ஸாலிம் ஷஹீதானதும் மக்கள் திருக்குர்ஆனில் நான்கில் ஒரு பக்கம் சென்று விட்டது என்று கூறினர்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் சஹ்யைன் தொகுதி 3 பக்கம் 251,252, கிதாப் மஃரூஃபத்தஸ் சஹாபா, பாப் ஸிக்ர் மனாகிப் சாலிம் மவ்லா அபீ ஹுஸைஃபா, ஹதீஸ் எண் 5004 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்கு அறிஞர்களின் பெயரைக் கூறி அவர்களிடம் திருக்குர்ஆன் கற்குமாறு கூறியிருந்தார்கள். அவர்களில் ஒருவர் சென்று விட்டார்.

அடுத்த சஹாபியின் குறிப்பு **ஹஸ்ரத் உத்பான் பின் மாலிக்** உடையது. ஹஸ்ரத் உத்பான் பின் மாலிக் கஸ்ரஜ் உடைய கிளையான பனூ ஸாலிம் பின் அவ்ஃப் கோத்திரத்தைச் சார்ந்தது. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்கும் ஹஸ்ரத் உமர் அவர்களுக்கும் இடையில் சகோதரத்துவம் ஏற்படுத்தினார்கள். இவர் பத்ர், உஹது மற்றும் அகழ் போர்களில் பங்கு பெற்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய வாழ்நாளிலேயே இவரது கண் பார்வை போயிருந்தது. இவரது மரணம் ஹஸ்ரத் முஆவியா உடைய ஆட்சிக் காலத்தில் நடந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 415,416 உத்பான் பின் மாலிக் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவில் வந்ததும் ஹஸ்ரத் உத்பான் பின் மாலிக், தம்முடன் இருந்தவர்களும் வந்து அவர்களிடம் இங்கு தங்குங்கள் என்றார். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனது ஒட்டகத்தை விட்டு விடுங்கள். இப்போது அது கட்டளையிடப்பட்டுள்ளது என்றார்கள். அதாவது இறை விருப்பத்திற்கேற்ப அது அமரும் என்றார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 228,229 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது & ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 267,268)

ஹஸ்ரத் உமர் அறிவிக்கின்றார்கள்: நான் அன்ஸார்களில் எனது பக்கத்திலுள்ள பனூ உமைய்யா பின் ஸைத்தியா என்ற ஊரில் – இது மதீனாவுக்கு அருகில் இருந்தது. அந்த ஊரிலிருந்து இந்த ஊர் உயர்ந்த இடத்தில் இருந்தது. அங்கிருந்து முறை வைத்து ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வருவோம். ஒருநாள் அவர் வந்தால், ஒருநாள் நான் வருவேன். நான் வந்தால் அப்போது வந்த வஹி மற்றும் செய்திகளை அவரிடம் கொண்டு செல்வேன். அவர் சென்றால் அவரும் அவ்வாறே செய்வார்.

ஒருநாள் அந்த எனது அன்ஸாரி அக்கம் பக்கத்தவர் தனது முறைக்கு அவர் சென்றார். சென்று வந்து எனது வீட்டுக் கதவை ஓங்கித் தட்டினார். என்னைப் பற்றி விசாரித்தார். நான் பதற்றமடைந்தேன். வெளியே வந்தபோது அவர் ஒரு விபத்து நடந்து விட்டது என்றார்.

ஹஸ்ரத் உமர் இதனைக் கேட்டு கூறுகிறார்: ஹப்ஸாவிடம் சென்று பார்த்தபோது அவர் அழுது கொண்டிருந்தார். நான் அவரிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உம்மை தலாக் சொல்லி விட்டார்களா? என்று கேட்க, அவர் தெரியவில்லை என்றார். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றேன். நின்றவாறே நீங்கள் உங்கள் மனைவியரை தலாக் சொல்லி விட்டீர்களா? என்று கேட்டேன். அன்னார் இல்லை என்றார்கள். நான் அல்லாஹு அக்பர் என்றேன்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் இல்ம், பாப் தனாவிப் ஃபில் இல்ம், ஹதீஸ் எண் 89)

அறிவிப்பின்படி சில விபரங்கள் இருக்கின்றன. சம்பவம் நீண்டதாக உள்ளது. ஒரு மாதம் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனித்திருந்தார்கள். மனைவிமார்களை விட்டு மட்டுமல்ல. சஹாபாக்களை விட்டும் விலகி இருந்தார்கள். இதனால் அன்னார் மணவிலக்கு கொடுத்து விட்டதாக கருத்து ஏற்பட்டது. ஏதாவது கோபம் இருக்கலாம் என்று நினைத்தார்கள். எவ்வாறிருப்பினும் ஏதோ காரணங்கள் இருந்தன. ஆனால் இந்த காரணத்தால் அல்ல.

ஹஸ்ரத் ஸையத் பின் ஆபித்தீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் புகாரி ஹதீஸின் விளக்கவுரையில் எழுதுகிறார். ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள்: ஒருநாள் நான் சென்றேன். ஒருநாள் எனது நண்பர் சென்றார். அறிவைக் கற்க எவருக்கும் முழுமையான நேரம் கிடைக்கவில்லை எனில் இன்னொருவருடன் முறை வைத்து நியமித்துக் கொள்ளலாம். ஹஸ்ரத் உமர் ஹஸ்ரத் உத்பான் பின் மாலிக் அன்ஸாரியுடன் முறை வைத்துக் கொண்டதுபோன்று என்பதிலிருந்து சஹாபாக்களின் அறிவு தேடும் ஆர்வம் விளங்குகிறது. பணிகளை விட்டு விட்டு 3–4 மைல் கடந்து எல்லா நாளும் இந்தப் பணிக்காக வந்தனர்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் இல்ம், பாப் தனாவிப் ஃபில் இல்ம், ஹதீஸ் எண் 89 தொகுதி 1 பக்கம் 165, ரப்வாவிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஆனால் அல்லாமா அய்னீ புகாரியின் விரிவுரை உம்ததுல் காரியில் எழுதுகிறார். ஹஸ்ரத் உத்பான் பின் மாலிக் அக்கம்பக்கத்தவர் என்று கூறப்படுகிறது. ஆனால் சரியானது ஹஸ்ரத் உமர் உடைய அக்கம்பக்கத்தவர் அவ்ஸ் பின் கவ்லி ஆவார். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உமர் இந்த அறிவிப்பில் இவரை குறிப்பிடுகிறார்கள்.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் உத்பான் பின் மாலிக் உடைய கண் பார்வை சென்றதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஜமாஅத்துடன் தொழுவதிலிருந்து தனித்து தொழ அனுமதி கேட்டார். என்னால் வர முடியாது. எனக்கு அனுமதி வேண்டும். பள்ளிக்கு வர முடியாது என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டார். உங்களுக்கு தொழுகை அழைப்பு சப்தம் கேட்கிறதா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்க, ஹஸ்ரத் உத்பான் ஆம் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கவில்லை.

இது ஒரு பிரபல்யமான ஹதீஸ் ஆகும். நிறைய எடுத்து வைக்கப்படுகிறது. ஆனால் அதில் சிறிது விளக்கமும் உள்ளது. புகாரி ஹதீஸிலிருந்து தெரிய வருகிறது. பிறகு நபி கரீம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உத்பானுக்கு வீட்டில் தொழ அனுமதி வழங்கி விட்டார்கள். முதலில் தடுத்தார்கள். பிறகு அனுமதி கொடுத்து விட்டார்கள்.

இந்த வகையில் புகாரியில் அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் உத்பான் பின் மாலிக் தமது சமுதாயத்திற்கு இமாமத் செய்தார். கண் பார்வை இல்லாதவராக இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! இருள், வெள்ளம், மழை அதிகமாகி விட்டால் தெருவில் தண்ணீர் ஓடுகிறது. நான் கண் தெரியாதவன்.

எனவே அல்லாஹ்வின் தூதரே! என் வீட்டில் தொழுங்கள். அதனை நான் தொழுமிடமாக ஆக்கிக் கொள்வேன் என்று ஒருநான் வந்து கூறினார். இங்கு வருவது எனக்கு சிரமமாக உள்ளது. என் வீட்டில் ஓரிடத்தை தனியாக வைக்கிறேன். அதில் வந்து தொழுங்கள் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர் வீட்டிற்குச் சென்றார்கள். எங்கு தொழ விரும்புகிறீர் என்று கேட்டார்கள். வீட்டின் ஒரு பகுதியை அவர் சுட்டிக் காட்டினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இடத்தில் தொழுதார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 415 உத்பான் பின் மாலிக் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சஹீஹ் புகாரி, கிதாபுல் அஸான்... ஹதீஸ் எண் 667)

எனவே சிறப்பான நிலையில் வீட்டில் தொழ அனுமதித்தார்கள். சில அறிவிப்புகளிலிருந்து நிரூபணமாகிறது. மக்களை ஒன்று கூட்டி அங்கே தொழுது வாருங்கள். ஏனெனில் பருவநிலை கடுமையாக இருந்தால் வழியில் தடை இருந்தால் மஸ்ஜிது போக முடியா விட்டால் தவறில்லை என்று பிறகு அனுமதி கொடுத்தார்கள். ஆனால் ஜமாஅத்துடன் தொழ வேண்டும். வீட்டின் ஒரு பகுதியில் தொழுதாலும் சரியே. இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகி விட்டது.

ஹஸ்ரத் ஸைய்யிது வலியுல்லாஹ் சாஹிப் சஹீஹ் புகாரியில் கிதாபுல் அஸானில் குறிப்பிட்டவாறு அதாவது பாபு ருக்ஸத் ஃபில் மத்தர் வல்அலத அன்யுஸல்லி ஃபில் அஹ்லி. அதாவது மழை அல்லது வேறு காரணத்தால் தத்தமது இடத்திலும் தொழுவதற்கு அனுமதி என்ற விரிவுரையில் கூறுகிறார்கள். மேற்கண்ட இமாம் அதாவது புகாரி, இயலாத நிலையில் தமது நிலைமையை விளக்கியவர் பற்றி எடுத்து வைக்கிறார். அவர் ஜமாஅத்துடன் தொழுவதில் இருந்து விலகுதல் பெற விரும்பினார்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை வீட்டில் தனியாக தொழ அனுமதிக்கவில்லை. வீட்டில் தனியாக தொழுது கொள்ளுங்கள் என்று அனுமதி கொடுக்கவில்லை. மாறாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதும் முடிந்தவரை கட்டளையை செயல்படுத்துவதில் எளிதை தருவதில் கவனம் செலுத்தினார்கள். முடிந்தவரை மார்க்க விஷயத்தில் எளிதை உருவாக்க விரும்பினார்கள். இருந்தும் அன்னார் தனியாக தொழ அனுமதி வழங்கவில்லை. அனுமதி கொடுத்தார்கள் என்றால் ஜமாஅத்துடன் தொழ வேண்டும் என்ற நிலையில் அனுமதி கொடுத்தார்கள்.

பிறகு எழுதுகிறார்: ஹஸ்ரத் உத்பான் கண் தெரியாதவர். பாதையோ தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதாக இருந்தது. சில அறிவிப்பின்படி அவர் வீட்டில் தொழ அனுமதி கேட்டார். அன்னார் அனுமதி அளித்தார்கள். ஆனால் ஜமாஅத்துடன் தொழ வேண்டும். ஜமாஅத்துடன் தொழுவீர்கள் என்றால் அனுமதி உண்டு என்றார்கள்.

பிறகு அவர் எழுதுகிறார்: கடமையான தொழுகையை தனியாக தொழலாம் என்றால் அன்னார் உத்பானுக்கு அனுமதி கொடுத்திருப்பார்கள்.

(சஹீஹுல் புகாரி தொகுதி 2 பக்கம் 66, கிதாபுல் அஸான்.... ஹதீஸ் எண் 667, ரப்வாவிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஆகவே இவ்விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இங்கும் கூட தூரம் அதிகம். வாகன வசதி இல்லை. நேரம் இல்லை என்றால் நான் பலமுறை கூறி விட்டேன். அஹ்மதிகள் தமது வீடுகளில் தொழுகை சென்டர் அமைத்து அக்கம்பக்கத்தவரை ஒன்று கூட்டி ஜமாஅத்துடன் தொழ வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் இந்த கட்டளையின்படி செயல்படக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக.

இப்போது சில மரணித்தவர்கள் பற்றி கூறுவேன். அவர்களின் ஜனாஸா தொழுவிக்கப்படும் அவர்களுள் முதலாவது ரப்வாவைச் சேர்ந்த கண்ணியத்திற்குரிய குலாம் முஸ்தஃபா அஃவான் சாஹிப் ஆவார். 16 மார்ச் அன்று தமது 78 வது வயதில் வஃபாத் ஆனார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் இவர் பிறப்பு அஹ்மதி. இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவரது தந்தை வழிப்பாட்டனார் யுவான் பக்ஷ் சாஹிப் மூலம் வந்தது. மர்ஹூம் ஐவேளை முறைப்படி தொழுவார். தஹஜ்ஜுத்தும் பேணுவார். இறையச்சம் உள்ளவர். பரிவு, நலம் நாடுதல், நற்குணம், இனிய சுபாவம், எளிய நடைமுறை உடையவர். பெரும் துஆ செய்பவர். விருந்தோம்பல் செய்பவர். ஏழைகளைப் பராமரிப்பவர். உறவினர்களை நல்ல முறையில் நடத்துவார். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவர். நல்ல களங்கமற்ற மனிதர். ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத் அமைப்புடன் ஆழிய பிடிப்புள்ளவர்.

சவூதி அரேபியாவில் பணி செய்தார். அப்போது சவூதியில் இருக்கும்போது அவருக்கு 9 முறை பைத்துல்லாஹ்வில் ஹஜ் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. எண்ணற்ற உம்ரா செய்யும் வாய்ப்பும் கிடைத்தது. அன்னார் கஅபாவிலும் மதீனாவில் மஸ்ஜிது நபவியிலும் கட்டுமானப் பணிகளில் பணி செய்யும் வாய்ப்பு பெற்றிருந்தார். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர்.

ஒருநாள் திடீரென்று உடல்நிலை மோசமானது. கவலையெல்லாம் சொத்தின் பங்கை கொடுக்க வேண்டும் என்பதாக இருந்தது. இந்த வகையில் அல்லாஹ் உடல்நலம் வழங்கினான். உடனே சிறிது சொத்துக்களை விற்று சொத்தின் பங்கை வழங்கினார். அவரது நினைவாக மனைவியுடன் அஹ்மது முஸ்தஃபா என்ற ஜெர்மனியில் வசிக்கும் ஒரு மகன், நான்கு மகள்கள், மருமகன் முஹம்மது ஜாவிது சாஹிப். முரப்பி சில்ஸிலா ஸேம்பியா மற்றும் ஜமீல் அஹ்மது சாஹிப் தபஸ்ஸும்.

ரஷ்யாவின் முபல்லிக் ஆகிய வாழ்வை அர்ப்பணித்தவராக சேவை செய்பவர் ஆகியோரை விட்டுச் சென்றுள்ளார். மர்ஹூமின்

மகள்கள் இளம் முபல்லிக்குகளுடன் திருமணம் ஆகி உள்ளது. தமது வாழ்வை அர்ப்பணித்த கணவர்மாருடன் வெளிநாட்டில் இருக்கிறார்கள். வெளிநாடு என்பதால் தந்தையின் மரணத்தின் வேளையில் வர முடியவில்லை. இந்த அதிர்ச்சியை தாங்க வேண்டி வந்தது. அல்லாஹ் பொறுமை, தைரியம் மற்றும் சகிப்புத்தன்மையை வழங்குவானாக. மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய அமத்துல் ஹய் சாஹிபா. முஹம்மது நவாஸ் சாஹிப் காட்கடி உடைய மனைவியாவார். இவர் 15 மார்ச் அன்று மரணமடைந்தார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர் காதியானின் நவாஹி காவோபகோலைச் சார்ந்தவர். இவரது தாயார் இறந்து இரு வருடங்களே ஆகியிருந்தன. இவரது பெரியப்பா முஹம்மது இப்ராஹீம் இவரை வளர்த்தார். மர்ஹூமா பிறப்பு அஹ்மதியாவார். இவரது குடும்பத்தில் 1903 –ல் அஹ்மதிய்யத் வந்தது. பாகிஸ்தான் உருவான பிறகு இவரது பெரிய தந்தையின் குடும்பம் இடம்பெயர்ந்து ஜடானுவாலா வந்து தங்கியது. பிறகு அங்கிருந்து 1981 –ல் ரப்வாவுக்கு இடம்பெயர்ந்தது. பிள்ளைகளின் கல்விக்காக இறுதி மூச்சு வரை ரப்வாவிலேயே தங்கினார்.

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார். அல்லாஹ் இவருக்கு 6 மகன்களையும் 5 மகள்களையும் வழங்கினான். ஒரு மகள் சிறு வயதிலேயே வஃபாத் ஆகி விட்டது. குழந்தைகளை அர்ப்பணிக்கத் தொடங்கினார். அர்ப்பணிக்க அர்ப்பணிக்க குழந்தை கிடைத்துக் கொண்டே இருந்தது. இவரது மூத்த மகன் ரானா பாரூக் அஹ்மது சாஹிப் நஸாரத் தவஅத்தே இலல்லாஹ்வின் முரப்பியாக உள்ளார். சிறியவர் ஹாஃபிஸ் மஹ்மூது அஹ்மது தாஹிர் ஜாமிஆ அஹ்மதிய்யா தன்ஸானியாவில் ஆசிரியராக சேவை செய்கிறார். தாயார் ஜனாஸாவுக்காக பாகிஸ்தான் செல்ல முடியவில்லை.

அதுபோன்று மகன் வழிப்பேரன் முரப்பி ஸில்ஸிலா ஆவார். மகள் வழிப்பேரன் கானாவில் முபல்லிக் சில்ஸிலா. ஒரு மகள் வழிப்பேரன் மற்றும் ஒரு மகன் வழிப்பேத்தி திருக்குர்ஆன் மனனம் செய்துள்ளார்கள். நிறைய மகன் வழிப் பேத்திகளும் மகள் வழிப்பேத்திகளும் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவரது மகன் ஹாஃபிஸ் மஹ்மூது கூறுகிறார்: எமது பெற்றோர் முழு வாழ்விலும் தியாகத்தின் தொண்டிற்கு முன்னுரிமை வழங்குபவர்களாக இருந்தனர். மேலும் எம்மை ஜமாஅத் அமைப்புடனும் கிலாஃபத் அஹ்மதிய்யாவுடனும் தொடர்புடன் இருக்கவும் ஜமாஅத்துடன் தொழுகையை பேணுமாறும் எல்லா தியாகத்திற்கும் தயாராக இருக்குமாறும் ஆயத்தம் செய்தனர்.

அஹ்மதிய்யத்தை தப்லீக் செய்வதில் ஆர்வம் அதிகம் இருந்தது. தாயாரிடம் இருந்து அவர்களின் அஹ்மதி அல்லாத எல்லா சகோதர சகோதரிகளுடன் முடிந்தவரை தப்லீக் செய்யப்பட்டது. இவர்களின் தப்லீகினால் இவர்களது ஒரு சகோதரர் அப்துல் மஜீத் சாஹிப் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் வாய்ப்பு பெற்றார். அவர்களின் பிள்ளைகள் அல்லாஹ்வின் அருளால் மார்க்க சேவகர்களாக உள்ளனர். சோர்கோட் ஜமாஅத்தில் 1953 மற்றும் 1974 –ல் சூழ்நிலை மோசமாக இருந்தபோது மிகவும் தைரியமாக துணிச்சலுடன் வாழ்வை கழித்தார். எந்த பயத்தையும் முன்வரவிடவில்லை.

1974 –ல் ஆர்ப்பாட்டம் நடந்தபோது ஒருநாள் ஊரின் முக்கியமானவரின் மனைவி எங்கள் வீட்டிற்கு வந்து அவரது தூதுச் செய்தியை தந்தார். ஆர்ப்பாட்ட ஊர்வலம் வருகிறது. அஹ்மதி வீடுகளை தாக்க வருகிறார்கள். ஆண்கள் வெளியில் வயலில் மறைந்து கொள்ளுங்கள். பெண்கள் எங்கள் வீட்டுக்கு வந்து விடுங்கள் என்று தூது அனுப்பினார். ஆனால் எமது தாயார் நாங்கள் வீட்டிலேயே இருப்போம். இருந்தாலும் சரி இறந்தாலும் சரி என்று பதில் கூறி விட்டார். அந்த நாட்களில் ஒருமுறை வீட்டிற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் வந்தனர். வீட்டில் ஆண்கள் இல்லை. சகோதரிகள் மட்டும் இருந்தனர். தாயாரும் இருந்தார்.

தாயார் கூறுகிறார்: வெளியில் கலகக்காரர்கள் நின்றனர். கையில் ஒரு கோடாரியை வைத்துக் கொண்டு வீட்டின் தாழ்வாரத்தில் நடமாடினர். வெளியிலிருந்து ஒருவர் இந்த வீட்டை தாக்குங்கள் என்று குரல் கொடுத்தார். இவர் உள்ளிருந்து குரல் கொடுத்தார். எவராவது உள்ளே வந்தால் சுவரின் அருகில் வந்தால் உங்கள் தலையை உடலிலிருந்து தனியாக எடுத்து விடுவேன்.

ஹஸ்ரத் ஸபியா எவ்வாறு தலையைக் கொய்து வெளியில் வீசினார்களோ அவ்வாறே செய்வேன் என்றார். எவ்வாறிருப்பினும் அவரது துணிச்சலைப் பார்த்து எதிரிகள் அங்கிருந்து சென்று விட்டனர். எக்ஸீரில் அவரது ஒரு மகன் இராணுவத்தில் இருந்தார். யுத்த கைதிகள் இராணுவத்தில் இருந்தார்கள். அல்லது அரசு பணியாளர்கள் இருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் யுத்த கைதியாக அங்கு இருந்தனர். அவருக்கு மூன்று வருடம் வரை யுத்த கைதியாக இருந்து பொறுமையாக காலம் கழித்தார். அவரது தந்தையார் வந்ததும் முதலில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹிடம் அர்ப்பணித்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நமது தாயாருக்கு பேரன்பு இருந்தது. வீட்டில் பேச்சு நடக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சம்பவங்களை கூறுங்கள் என்று கூறுவார்கள். இறுதி நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி அவர்கள் வருகிறார்கள் என்று கூறி வந்தார்.

அல்லாஹ் அவர்களின் தகுதியை உயர்த்துவானாக. மன்னிப்பின் நடைமுறையைக் காட்டுவானாக. அவரது சந்ததிகளுக்கும் இவரது நன்மைகளை தொடர்ந்து செய்யும் வாய்ப்பினை வழங்குவானாக.

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் கூற்றிலிருந்து...**

உண்மை மற்றும் நீதியை எடுத்துரைத்து நேர்வழியை வழங்குபவர்களே உண்மையான நேர்வழி வழங்குபவர்கள். உண்மையுடன் நேர்வழி வழங்கும் மக்களே வெற்றி பெறும் கூட்டத்தினர் ஆவர். இன்றும் கூட உண்மையுடன் நேர்வழி வழங்குபவர்களே வெற்றி பெறுவர். மேலும் அவர்கள் நீதியை நிலைநாட்டக் கூடியவர்கள் ஆவர். மனிதன் சுயமே நேர்வழியில் நிலைபெறவில்லை என்றால் பிறருக்கு அவர் என்ன நேர்வழியை வழங்குவார்? மனிதன் முதலில் சுயமே நீதியில் நிலைபெறவில்லை என்றால் மற்றவர்களுக்கு நீதியை நிலைநாட்டுமாறு எவ்வாறு கூற முடியும்? (குத்பா ஜுமுஆ 14 நவம்பர் 2017)

**ஃபைஸல் ஹமீது இலாஹி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அவர்கள் கூறினார்கள்: காதியான் நகரம் ஒரு தூய இடமாகும். எந்த தூதுச் செய்தி இந்த நகரத்திலிருந்து வழங்கப்பட்டதோ அது இன்று 212 நாடுகளில் பரவி விட்டது. முழு உலகிலும் எங்கெல்லாம் ஜமாஅத் உறுப்பினர்கள் இருக்கின்றார்களோ அவர்கள் அனைவரும் மிகுந்த அன்புடனும், நேசத்துடனும் சந்திக்கின்றனர். எங்களது குடும்பத்தைச் சார்ந்த யாராவது ஒருவர் வெளிநாட்டிற்கு எப்போது சென்றாலும் உங்களை அமைப்பைச் சார்ந்தவர்கள் மிகுந்த கண்ணியம் அளிக்கின்றனர். இது இந்த தூய பூமியிலிருந்து வழங்கப்பட்ட அன்பின் போதனையின் விளைவாகும்.

உலகத்தின் அன்பு, சகோதரத்துவம், ஒற்றுமை ஆகியவற்றை பரப்புகின்ற இந்த ஜமாஅத்தில் உறுப்பினராக இருக்கின்ற நீங்கள் நற்பேறு பெற்ற மக்கள் ஆவீர்கள். உங்களது ஜமாஅத்தின் மோட்டோவும் அன்பின் சாராம்சத்தையே கொண்டுள்ளது. ஜமாஅத் அனைத்து மக்களுடனும் பரிவுடன் நடந்து கொள்கின்றது. ஏழைகளுக்கு உதவி செய்கின்றது. தேவையுடையவர்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றது.

நாங்களும் இந்த ஜமாஅத்தை எமது குடும்பமாகவே கருதுகின்றோம். எங்கள் முன்னோர்களும் ஜமாஅத்தோடு மிகுந்த அன்பு மற்றும் நேசம் நிறைந்த தொடர்பை வைத்திருந்தார்கள். நான் உங்கள் அனைவருக்கும் இந்த மகத்துவமிக்க மாட்டிற்கான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(3) மதிப்பிற்குரிய ஃபாதர் செமின்த் ராயே சாஹிப் (பிஷர் நார்த் இந்தியா ஆஃப் அமிர்தஸர்):**

அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து கண்ணிமிக்க நபர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள். மேலும் அனைவருக்கும் ஸலாத்திற்கான அன்பளிப்பை கூறினார்கள்.

அவர்கள் கூறினார்கள்: நான் பல வருடங்களாக உங்களது இந்த வியக்கத்தக்க ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நற்பேற்றைப் பெற்று வருகின்றேன். உங்களது ஜமாஅத்துடன் எங்களுக்கு நல்ல தொடர்பு இருக்கின்றது. இன்று உலகத்திற்கு அன்பின் பசி இருக்கிறது. இன்று உலகத்திற்கு எந்த பொருள் அதிகமாக தேவைப்படுகிறதோ அது அன்பு ஆகும்.

நாம் அனைவரும் நமது வெறுப்புகளைத் தூரம் வைத்தவாறு நன்மையின் பக்கம், ஒற்றுமையின் பக்கம் காலெடுத்து வைக்க வேண்டிய தேவை உள்ளது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த பணிகளை செய்ய வேண்டும். ஆண்டு மாநாட்டின் மூலமாக நான் பகிர்ந்து கொள்கின்ற இந்த விஷயங்கள் இந்த பணிக்காக மிகச் சிறப்பான சந்தர்ப்பமாகும்.

நான் உங்கள் அனைவருக்கும் இந்த மகத்துவமிக்க மாட்டிற்கான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஜமாஅத் முன் வைக்கின்ற முன்மாதிரிகளை மற்ற மார்க்கத்தைச் சார்ந்தவர்களும் பின்பற்ற வேண்டும். மேலும் அன்பின் தூதுச் செய்தியை வழங்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நோக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

**(4) மதிப்பிற்குரிய பல்விந்தர் லாடி சாஹிப் (ஷிரி ஹர்கோபிந்த் பூரின் MLA)**

இன்று மிக்க மகிழ்ச்சிக்குரிய நாளாகும். ஒவ்வொரு வருடத்தைப் போன்றும் இவ்வருடமும் ஜமாஅத் தமது மகத்துவமிக்க மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறது. தொலை தூரத்திலிருந்து எந்த மக்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்களோ அவர்கள் அனைவரையும் நான் வரவேற்கின்றேன். ஜமாஅத் மனித சமுதாயத்திற்குச் செய்கின்ற தொண்டுகள் போற்றத்தக்கதாகும். ஜமாஅத் எல்லா நல்ல பணிகளிலும் மற்றவர்களை விட முன்னே உள்ளது. நான் மீண்டும் ஒரு முறை உங்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த மகத்துவமிக்க மாநாட்டில் கலந்து கொண்டமைக்காக நான் உங்களை வரவேற்கின்றேன்.

**(5) மதிப்பிற்குரிய ராமசுப்பு – ஆல் இந்தியா காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவர் மற்றும் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தின் முன்னாள் MP:**

அவர்கள் கூறினார்கள்: நான் சென்னையிலிருந்து இங்கு உங்களது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளேன். மேலும் நான் உங்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். இது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரிய மற்றும் மதிப்பிற்குரிய விஷயமாகும். நான் தமிழ்நாடு மாநிலத்தின் திருநெல்வேலியைச் சார்ந்தவன். ஜமாஅத் உலகத்தில் பரப்பிக் கொண்டிருக்கின்ற அன்பின் தூதுச் செய்தி போற்றத்தக்கதாகும். இன்று இந்த தூதுச் செய்தி உலகத்தில் 212 நாடுகளில் பரவி விட்டது.

நான் ஹுஸூர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் உலகத்தில் அன்பின் தூதுச் செய்தியை பரப்பி வருகின்றார்கள். நான் உங்களது ஜமாஅத்தை நன்றாக அறிந்துள்ளேன். இன்று உலகம் அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. அணுஆயுதப் போருக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. உலகம் தமது அழிவிற்கான ஏற்பாட்டை தாமே செய்து வருகின்றது.

ஆனால் உங்களது ஜமாஅத்தின் கலீஃபா முழு உலகிலும் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் போதனையை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் முழு உலகையும் இந்த அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக முயற்சி செய்து வருகின்றார்கள். நானும் ஜமாத்துடன் ஒன்றிணைந்து விட்டேன். இன்று அனைத்து மார்க்கத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு ஒன்று கூடியுள்ளனர். இங்கிருந்து அன்பு, சாந்தியின் தூதுச் செய்திய வழங்கப்படுகிறது.

நான் திருநெல்வேலி ஜமாஅத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறுகின்றேன். நீங்கள் மிகச் சிறந்த மக்கள் ஆவீர்கள். உங்களது இயல்பு மென்மையானது. நீங்கள் வெறுப்பு மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான மக்கள் ஆவீர்கள். இஸ்லாம் எப்போதும் அன்பின் தூதுச் செய்தியையே வழங்கியுள்ளது. உங்களது ஜமாஅத் திருக்குர்ஆனின் போதனைகளை பரப்பிக் கொண்டிருக்கிறது. ஜமாஅத் திருக்குர்ஆன் கண்காட்சியையும் நடத்துகின்றது. உங்களது ஜமாஅத் மனிதத் தொண்டு பணிகளிலும் முன்னிலையில் இருக்கிறது. ஏழைகளுக்கு உதவி செய்கிறது. கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது.

இது மிகப்பெரிய மற்றும் போற்றத்தக்க விஷயமாகும். நான் உங்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று உங்களது இந்த மாநாட்டில் கலந்து கொண்டு எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

உங்களது ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் இதுவரை எனக்கு கிடைக்கவில்லைதான். ஆனால் நான் அவர்களது அருளுக்குரிய முகத்தை புகைப்படத்தில் கண்டுள்ளேன். அன்னாரது முகம் மிகுந்த சாந்தியாகவும், அழகாகவும், ஈர்ப்புத் தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.

நான் ஹுஸூர் அவர்களிடம், தாங்கள் தங்களது அருளுக்குரிய பாதத்தை எங்களது பூமியிலும் (திருநெல்வேலி, தமிழ்நாடு) வையுங்கள் என்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கின்றேன்.

எனக்கு இந்த கண்ணியத்தை வழங்கியதற்காக நான் உங்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(6) மதிப்பிற்குரிய சின்த் பாபா சந்தூக் சிங் ஜி (அமிர்தஸர்):**

அவர்கள் கூறினார்கள்: காதியானின் தூய பூமியில் உங்கள் அனைவருக்கும் எனது சலாம். உங்கள் அனைவருடனும் இருப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருப்பது எனது நற்பேறாகும். முஸ்லிம் சமுதாயம் எப்போதும் சீக்கிய சமுதாயத்தை ஏற்றுக் கொண்டவர்களோடு பரிவுடன் நடந்து வந்துள்ளது...

முஸ்லிம் சமுதாயம் ஒவ்வொரு இக்கட்டான தருணத்திலும் எங்களோடு இருந்துள்ளது. இந்த இரண்டு மார்க்கங்களின் சிறப்புத்தன்மை என்னவென்றால், ஏகனும் இணையற்றவனுமாகிய இறைவனை இவர்கள் வணங்குகின்றனர். அல்லாஹ் உங்கள் அனைவர் மீதும் தனது கருணை மற்றும் அருளைப் பொழிவானாக.

மேலும் இங்கு உங்களது அனைத்து நல்ல துஆக்களையும் ஏற்றுக் கொள்வானாக. இங்கு நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் உங்களது நேரத்தைக் கழியுங்கள். மேலும் மகிழ்ச்சியுடன் உங்களது வீட்டிற்குத் திரும்பிச் செல்லுங்கள். நான் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்கு இவ்வளவு பெரிய கண்ணியத்தை நீங்கள் வழங்கியுள்ளீர்கள். உங்கள் அனைவரையும் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. உங்கள் அனைவருக்கும் நன்றி.

**(7) மதிப்பிற்குரிய பரம்ஜீத் சிங் ஜி கல்ஸி (National award of Best Teachering)**

அவர்கள் முதலில் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் மாநாட்டின் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். மேலும் கூறினார்கள்: நீங்கள் மனித இனத்திற்குத் தொண்டு செய்யும் மகத்தான பணியைச் செய்கின்றீர்கள். இது எத்தகைய புனிதமான இடமென்றால், இங்கிருந்து மனிதத்துவத்தின் முழக்கம் எழுந்து அது முழு உலகிலும் பரவியது. நாமும் நம்மிடம் மனிதத்துவத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். ஒருவருக்கிடையே இருக்கின்ற பிரச்சனைகள், பிரிவுகள் ஆகியவற்றை அழித்து ஒன்றாக இணைந்து வாழ்க்கையை கழிப்பதற்கான அவசியம் உள்ளது. மனிதத்துவம்தான் மிகப்பெரிய மார்க்கமாகும்.

**(8) மதிப்பிற்குரிய சேனல் ஜாகட் சாஹிப் (குர்தாஸ்பூர் MP மற்றும் பஞ்சாப் காங்கிரஸ் கட்சியின் தலைவர்)**

அவர்கள் கூறினார்கள்: காதியானின் இந்த அருளுக்குரிய பூமியில் இந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான கண்ணியம் எனக்கு கிடைத்துள்ளது. தொலை தூரத்திலிருந்து பயணம் செய்து இறைவனுக்கே உரிய இந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நீங்கள் இங்கு காதியான் வந்துள்ளீர்கள். உங்கள் அனைவரையும் நான் வரவேற்கின்றேன்.

உலகத்தில் மிகக் குறைவாகவே மனிதத்துவதம் தொடர்பான முழக்கங்கள் எழுகின்ற மாநாடுகள் நடைபெறுகின்றன. இது இன்று நம் அனைவருக்கும் மிகப்பெரிய தேவையாக இருக்கின்றது. உங்களது ஜமாஅத் செய்து வருகின்ற மனித இனத்திற்கு செய்து வருகின்ற தொண்டு மிக மகத்துவமிக்க பணியாகும். ஒருவர் மற்றவருக்கிடையே இருக்கின்ற பகைமையை முடிவுக்குக் கொண்டு வந்து அன்பு மற்றும் நேசத்தை நாம் அதிகரிக்க வேண்டும். மனிதத்துவம்தான் மிகப்பெரிய விஷயமாகும் என்ற தூதுச் செய்தியை இன்று வழங்க வேண்டியது அவசியமாகும். நான் உங்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதற்குப் பிறகு மதிப்பிற்குரிய கூட்டத்தின் தலைவர் அவர்கள் முன்னாள் MLA ஆன மதிப்பிற்குரிய அஷோனி ஜி அவர்களுக்கும் யாதோநதர் ஜி பண்டர் அவர்களுக்கும் அவர்களை கண்ணியப்படுத்தும் விதமாக சால்வை அன்பளிப்பாக வழங்கினார்கள்.

**(9) மதிப்பிற்குரிய சுக்ஜிந்தர் சிங் ரந்தாவ் சாஹிப் (டேரா நானக் பகுதியின் MLA)**

அவர்கள் கூறினார்கள்: இன்று எத்தகைய அழகிய முறையில் அன்பு மற்றும் சமாதானத்தின் தூதுச் செய்தியை ஜமாஅத் தரப்பிலிருந்து வழங்கப்படுகிறதோ அது போற்றத்தக்கதாகும். நாம் அனைவரும் அந்த ஏகனும் இணையற்றவனுமாகிய இறைவனால் படைக்கப்பட்டவர்கள் ஆவோம். ஆனால் உலகத்திற்கு வந்து அனைவரும் தனித்தனி வழிகளை அமைத்துக் கொண்டனர்.

நாம் அனைவரும் நேசத்துடன் இருக்க வேண்டியது அவசியமாகும். நமக்கு பொய் மற்றும் பாவத்திற்கு முன் குனிய வேண்டிய அவசியம் கிடையாது. மாறாக உண்மையின் வழியை மேற்கொள்வது அவசியமாகும். ஒருவர் மற்றவருடனான ஒற்றுமை, அன்பு ஆகியவற்றின் அவசியம் இருக்கிறது. இன்று இந்த வியக்கத்தக்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தொலை தூரத்திலிருந்து இங்கு வந்துள்ள அனைவரையும் நான் வரவேற்கின்றேன்.

நீங்கள் அனைவரும் நற்பேறு பெற்றவர்கள் ஆவீர்கள். தமது மார்க்கத்திற்காக இங்கு ஒன்று கூடியுள்ளீர்கள். இப்படிப்பட்ட சமுதாயங்கள் எப்போதும் உயிருடன் இருக்கிறது. ஒருபோதும் மரணிப்பதில்லை. இங்கு வந்து கேட்கப்படுகின்ற நல்ல விஷயங்களை செயல்படுத்துவது அவசியமாகும். நான் உங்கள் அனைவருக்கும் மாநாட்டின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**30 டிசம்பர் 2018 (ஞாயிற்றுக்கிழமை)**
**மூன்றாவது நாளின் முதல் அமர்வு**

மூன்றாவது நாளின் முதல் அமர்வு மதிப்பிற்குரிய செய்யது காலித் அஹ்மது ஷா சாஹிப் (நாஸிர் ஆலா சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா ரப்வா) அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஆசிரியர் மதிப்பிற்குரிய முர்ஷித் அஹ்மது டார் சாஹிப் அவர்கள் சூரா ஹாமீம் சஜ்தாவின் 34 முதல் 37 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய அதாவுல் முஜீப் லோன் சாஹிப் (நாயிப் நாஸிர் நஷ்ரோ இஷாஅத்) அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

அதற்குப் பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதிய கவிதையை ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் ஆசிரியர் மதிப்பிற்குரிய நஸ்ருமினல்லாஹ் சாஹிப் அவர்கள் அழகிய குரலில் படித்தார்கள். பிறகு இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய ஷிராஸ் அஹ்மது சாஹிப் (அடிஷனல் நாஸிர் ஆலா) சாஹிப் அவர்கள் **மூன்றவாது உலகப் போரிலிருந்து தப்பிப்பதற்கு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வேதனைமிக்க அறிவுரைகள்** என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள்.

அவர்கள் சொற்பொழிவின் துவக்கத்தில் உலகில் இருக்கின்ற அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டவாறு கூறினார்கள்:

♦ உலகில் தற்போது 23000 அணு ஆயுதங்கள் இருக்கின்றன. இவைகள் எத்தகைய சக்திவாய்ந்த அணு ஆதயுதங்கள் என்றால் தற்போது உலகில் இருக்கக்கூடிய முழு மனித இனத்தையும் இதனைக் கொண்டு பல முறை அழிக்க முடியும்.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 02 May 2019 Issue No. 18

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

♦ இந்த 23000 அணு ஆயுதங்களில் 2500 அணு ஆயுதங்கள் சில விநாடிகளிலேயே ஏவும் வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

♦ ஏவுகணைகள் அணு ஆயுதத்தை தமது இலக்கு வரை சென்று சேர்ப்பதற்கான பணியை செய்கின்றது. அந்த ஏவுகணைகள் எந்த அளவுக்கு வேகமாக செல்லக்கூடியது என்றால் 1000 மைல் தொலைவிற்கான பயணத்தை நான்கு நிமிடங்களில் அது சென்றடைகின்றது.

♦ இன்று அணு ஆயுதத்தை கொண்டிருக்கின்ற ஒரு நீர்மூழ்கி கப்பலின் வீரியமானது நான்கு கோடி மக்களை அழிக்கக்கூடியதாக இருக்கின்றது. மேலும் இது 300 முறை 300 மடங்கு அழிவை ஏற்படுத்தக்கூடிய வீரியத்தை கொண்டது. அதாவது ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணு ஆயுதத்தை விட சக்திவாய்ந்ததாகும்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: நாம் அகிலங்களுக்கே அருட்கொடையாக வந்த ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாவோம். ஹுஸூர் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது சுன்னத்தின்படி செயல்பட்டவாறு உலகை மூன்றாம் உலகப் போரிலிருந்து காப்பாற்றுவதற்கு அதிகமாக துஆ செய்கின்றார்கள். மேலும் மூன்றாம் உலகப் போரை எவ்வாறு தடுத்து நிறுத்தலாம் என்று எல்லா இடங்களிலும் அறிவுரையும் செய்து வருகின்றார்கள். அமைதிக் கருத்தரங்கு மூலமாகவும், பாராளுமன்றத்தில் சொற்பொழிவுகள் மூலமாகவும், உலகத் தலைவர்களை சந்திப்பதன் மூலமாகவும், Print and Electronic Media க்கள் மூலமாகவும் செய்து வருகின்றார்கள்.

நாமும் காலத்தின் கலீஃபாவின் அடிச்சுவட்டில் சென்றவாறு அல்லாஹ் தனது அருளால் உலகை மூன்றாம் உலகப் போரிலிருந்து காப்பாற்றுவதற்காக அதிகமாக துஆ செய்ய வேண்டும். நாம் முன்பை விட அதிகமாக இதனைக் குறித்து தப்லீக் செய்ய வேண்டும்.

நமக்கு இது தொடர்பாக அறிவுரை கூறியவாறு ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்: மூன்றாவது உலகப் போருக்கு முன்பாக சிறந்த முறையில் தப்லீக் செய்யுங்கள். மக்களைச் சென்றடையுங்கள். அவர்களுக்கு ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைய்யுங்கள்.

ஹுஸூர் நீங்கள் எதனைக் குறித்து மிகவும் அதிகமாக அஞ்சுகின்றீர்கள் என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டது?

அதற்கு ஹுஸூர் அவர்கள், மூன்றாம் உலகப் போருக்குப் பிறகு மக்கள் இறைவனைத் தேடுவார்கள். மார்க்கத்தின் பக்கம் குனிவார்கள். அப்போது அஹ்மதிகள் அத்தகைய பயிற்சி பெற்றவர்களாக இருக்கின்றார்களா? மேலும் இறைவனுடன் நமது தொடர்பு ஏற்பட்டு விட்டதா? நாம் ஐவேளை தொழுகைகளைக் குறித்த நேரத்தில் தொழுகின்றோமா? மூன்றாம் உலகப் போருக்குப் பிறகு மக்கள் நம் பக்கம் குனியும் போது அப்போது நாம் அவர்களை அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கத் தயாராக இருக்கின்றோமா? நமது செயல் முன்மாதிரிகள் அவர்களுக்கு வழிகாட்டக்கூடியதாக ஆகிவிட்டதா? மேலும் நமது மார்க்க அறிவு வரக்கூடியவர்களுக்கு மார்க்கத்தின் சரியான வழியை காட்டித் தருவதற்கு போதுமானதாக இருக்கின்றதா? இதுவே எனது அச்சமாகும் என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு இந்த அமர்வின் அடுத்த சொற்பொழிவை மதிப்பிற்குரிய ஸஹீர் அஹ்மது காதிம் சாஹிப் (அடிஷனல் நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் தென்இந்தியா) அவர்கள் **உலகத்தின் தற்போதைய நிலைமையும் மக்களை இறைவழியில் அழைப்பதன் முக்கியத்துவமும்** என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள்.

அவர்கள் கூறினார்கள்: இன்று முழு உலகத்திலும் நாலாப்புறமும் நிம்மதியற்ற நிலை, சீர்குலைவு, ஒருவர் மற்றவருக்கு துன்பத்தை இழைப்பது மற்றும் போர்கள் ஆகியவை அதிகரித்துக் கொண்ட இருக்கின்றன. சில நாடுகளில் பொதுமக்கள் அரசாங்கத்துடன் வெளிப்படையாகவே சண்டையிடுகின்றனர். மேலும் சில நாடுகளில் பொதுமக்களுக்கு எதிராக ஆட்சியாளர்கள் முன்னணியில் நிற்கின்றனர்.

குழப்பத்தை விரும்பக்கூடிய தீவிரவாதிகள் தமது குறுகிய நோக்கத்தை அடைவதற்காக குழப்பம் மற்றும் பதற்றமான நிலைமையின் நெருப்பை மூட்டுகின்றனர். மேலும் ஒன்றும் அறியாத அப்பாவி பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் ஆகியோரை கண்மூடித்தனமாக கொலை செய்கின்றனர்.

இது தவிர அரசியல் கட்சிகள் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தத்தமது நாடுகளில் நன்மையான பணிகளை செய்வதற்குப் பகரமாக ஒருவர் மற்றவருடன் சண்டையிடுகின்றனர். சில நாடுகள் மற்ற நாடுகளின் இயற்கை வளங்களின் மீது பேராசையின் கண் கொண்டு பார்க்கின்றனர்.

மேலும் அதை ஆக்கிரமிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். உலகத்தில் மிகப்பெரிய சக்தி படைத்தவர்கள் தமது மேன்மை மற்றும் ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்காக மட்டுமே தமது முழு முயற்சிகளையும் பயன்படுத்துகின்றன. மேலும் தமது நோக்கத்தை அடைவதற்காக எந்தவொரு தீய, தவறான விஷயங்களை செய்யவும் அவர்கள் தயங்குவதில்லை.

இத்தகைய நிலைமையில் இன்று உலகை இந்த அழிவிலிருந்து காப்பாற்ற ஏக இறைவனின் பக்கம் அழைப்பது மற்றும் உலகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியின் கீழ் ஒன்று சேர்ப்பது, அந்த கொடியானது, அமைதி மற்றும் சாந்தியின் கொடியாக இருக்கின்றது. அந்த கொடியின் கீழ் வந்தால் தான் இன்று உலகம் எஞ்சியிருக்க முடியும்.

எனவே அஹ்மதிகளாகிய நம்மீது இவை பொறுப்பாக இருக்கின்றது. உலகத்தின் இன்றைய நிலை அல்லாஹ்வை விட்டு வெகு தொலைவில் சென்றதனாலேயே ஆகும். இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலம் நமக்கு உண்மையான அந்த இறைவனைப் பற்றி தெரிய வந்துள்ளது.

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad